TNED140031742024

Presented on : 28-06-2024
Registered on : 04-07-2024
Decided on : 15-07-2026
Duration : 2 years, 0 months, 17 days

நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி

முன்னிலை: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,
நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 15ம் நாள் புதன்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 31ம் நாள்

சுருக்கு முறை விசாரணை வழக்கு எண்.305/2024

ஜெயராமன்
த.பெ.அர்த்தனாரி
க.எண்.552, லட்சுமி நகர்,
படவல்கால்வாய்,
அம்மாபேட்டை,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம். ... புகார்தாரர்.

/ எதிர் /

சத்தியமூர்த்தி,
த/பெ.குப்புசாமி
க.எண். 72 மாரப்பனூர்,
அம்மாபேட்டை,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம். ... எதிரி.

CASE SUMMARY
RULE 106 of Cr.PC

S.No	PARTICULARS	
1.	Name of the Parties : Jeyaraman -Vs- Sathyamoorthy	
2.	Caste or Religion	Hindu
3.	Calling	-
4.	Accused Residence / Office Address	D.No. 72, Marappanur, Ammapettai, Anthiyur Taluk, Erode District.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:00:14 +0530

5.	Date of Occurrence	-	
6.	Date of filing	04.07.2024	
7.	Apprehension	-	
8.	Release on bail	-	
9.	Commitment	-	
10.	Commencement of Trial	29.10.2025	
11.	Closure of Trial	16.04.2026	
12.	Sentence of Order	15.07.2026	
13.	Service of copy of Judgment	-	
14.	Case Summary : Period of Remand of the accused.	-	
15.	Date if filing of the final report	Not Applicable	
16.	Date of Questioning U/s.251 Cr.PC	11.07.2025	
17.	Date of Examination accused U/s.313(1)(b) Cr.PC	16.04.2026	
18.	Miscellaneous Petition and their results	Nil	
19.	Date of Examination in Chief and Cross	PW1 Chief: 29.10.2025	PW1 Cross: 30.01.2026 16.06.2026
20.	Details of abscondence of accused his appearance / Production	Nil	
21	Grant of stay by Superior Court and the results thereof	Nil	

Paragraph in the Judgment assigned continuous paragraph numbers in due obedience of the direction of the Hon'ble Supreme Court of India in BS Hari Commandant vs Union of India and others (2023 LiveLaw SC 303)

இவ்வழக்கு கடந்த 04.07.2024ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.பாரதி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.சுரேஷ் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:00:28 +0530

தீர்ப்புரை

இவ்வழக்கானது, மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனி நபர் வழக்காகும்.

2. **புகார்தாரர் தாக்கல் செய்துள்ள புகாரின் சுருக்கம்:–**

புகார்தாரர் தமிழன் ஆட்டோ ஏஜென்ஸி என்ற இரண்டு சக்கர வாகனங்கள் விற்பனை செய்யும் ஏஜென்ஸி அம்மாபேட்டையில் நடத்தி வருவதாகவும், எதிரி தாளவாடியில் உள்ள TASMAC கடையில் பணியாளராக வேலை செய்தும் மற்றும் Sree Pranav Oils செக் எண்ணெய் ஆட்டும் கடையினை மாரப்பனூரில் சொந்தமாக நடத்தி வந்தார் என்றும், புகார்தாரரின் ஏஜென்ஸியில் இரண்டு சக்கர வாகனத்தை எதிரி விலைக்கு வாங்கிய வகையில் எதிரியை கடந்த 5 வருடங்களாக நன்கு தெரியும் என்கிற அடிப்படையில், கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் எதிரி ரூ.2,00,000/–(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) தேவைப்படுவதாக கூறியதன் அடிப்படையில், கடந்த 03.02.2024ம் தேதி அன்று புகார்தாரரிடம் இரண்டு மாதங்களில் திருப்பித் தருவதாக பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக எதிரி, ஆக்சிஸ் வங்கி, அந்தியூர் கிளையின் காசோலை எண்.040942 என்ற காசோலையை 03.04.2024 என பின் தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், பின்னர், மேற்கண்ட காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அம்மாபேட்டை கிளையில், 03.04.2024ம் தேதியில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது, Account Closed என்ற குறிப்புடன் 04.04.2024ம் தேதியில் திருப்பப்பட்டு, 05.04.2024ம் தேதியில் புகார்தாரர் வங்கியில் திருப்பப்பட்டதாகவும், பின்னர், புகார்தாரர் 08.04.2024ம் தேதியில் தனது வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை 12.04.2024ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டு, பின்னிட்டு, எதிரி பதிலோ, பணமோ, எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஆகவே, எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென்று கூறி, புகார்தாரரால் இந்த தனிநபர் குற்றமுறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:00:31 +0530

3. புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றத்திற்கு, முதலேற்பு வழக்கு இருந்ததால், இப்புகார் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. எதிரி முன்னிலையானதும், அவருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 204ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரியின் மீதான மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றம் பற்றி, எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்கும்பொருட்டு, புகார்தாரர்கள் தரப்பில், புகார்தாரர் ம.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4, எ.த.சா.ஆ.1 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

6. **புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறிய வரும் புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

6.1 இவ்வழக்கின் புகார்தாரரான ம.சா.1 ஜெயராமன் தனது சாட்சியத்தில், தான் தமிழன் ஆட்டோ ஏஜென்ஸி என்ற இரண்டு சக்கர வாகனங்கள் விற்பனை செய்யும் ஏஜென்ஸி அம்மாபேட்டையில் நடத்தி வருவதாகவும், எதிரி தாளவாடியில் உள்ள TASMAC கடையில் பணியாளராக வேலை செய்தும் மற்றும் Sree Pranav Oils செக் எண்ணெய் ஆட்டும் கடையினை மாரப்பனூரில் சொந்தமாக நடத்தி வந்தார் என்றும், தனது ஏஜென்ஸியில் இரண்டு சக்கர வாகனத்தை எதிரி விலைக்கு வாங்கிய வகையில் எதிரியை கடந்த 5 வருடங்களாக நன்கு தெரியும் என்கிற அடிப்படையில், கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் எதிரி ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) தேவைப்படுவதாக கூறியதன் அடிப்படையில், கடந்த

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:00:34 +0530

03.02.2024ம் தேதி அன்று தன்னிடம் இரண்டு மாதங்களில் திருப்பித் தருவதாக பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக எதிரி, ஆக்சிஸ் வங்கி, அந்தியூர் கிளையின் காசோலை எண்.040942 என்ற காசோலையை 03.04.2024 என பின் தேதியிட்டு தன்னிடம் கொடுத்துள்ளார் என்றும், பின்னர், மேற்கண்ட காசோலையை தான் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அம்மாபேட்டை கிளையில், 03.04.2024ம் தேதியில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது, Account Closed என்ற குறிப்புடன் 04.04.2024ம் தேதியில் திருப்பப்பட்டு, 05.04.2024ம் தேதியில் தனது வங்கியில் திருப்பப்பட்டதாகவும், பின்னர், தான் 08.04.2024ம் தேதியில் தனது வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை 12.04.2024ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டு, பின்னிட்டு, எதிரி பதிலோ, பணமோ, எதுவும் கொடுக்கவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார். இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. புகார்தாரர் தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து, எதிரிக்கு பாதகமான அம்சங்களை தொகுத்து, கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரி பொய்சாட்சி, நான் அவரிடம் எடுத்த வண்டிக்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், பொய்வழக்கு என்றும், மேலும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறியுள்ளார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

8. **புகார்தாரர் தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.**

புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதம் மற்றும் வாதுரையில், புகார்தாரர் தமிழன் ஆட்டோ ஏஜென்ஸி என்ற இரண்டு சக்கர வாகனங்கள்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:00:37 +0530

விற்பனை செய்யும் ஏஜென்ஸி அம்மாபேட்டையில் நடத்தி வருவதாகவும், எதிரி தாளவாடியில் உள்ள TASMAC கடையில் பணியாளராக வேலை செய்தும் மற்றும் Sree Pranav Oils செக் எண்ணெய் ஆட்டும் கடையினை மாரப்பனூரில் சொந்தமாக நடத்தி வந்தார் என்றும், புகார்தாரரின் ஏஜென்ஸியில் இரண்டு சக்கர வாகனத்தை எதிரி விலைக்கு வாங்கிய வகையில் எதிரியை கடந்த 5 வருடங்களாக நன்கு தெரியும் என்கிற அடிப்படையில், கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் எதிரி ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) தேவைப்படுவதாக கூறியதன் அடிப்படையில், கடந்த 03.02.2024ம் தேதி அன்று புகார்தாரரிடம் இரண்டு மாதங்களில் திருப்பித் தருவதாக பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக எதிரி, ஆக்சிஸ் வங்கி, அந்தியூர் கிளையின் காசோலை எண்.040942 என்ற காசோலையை 03.04.2024 என பின் தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், பின்னர், மேற்கண்ட காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அம்மாபேட்டை கிளையில், 03.04.2024ம் தேதியில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது, Account Closed என்ற குறிப்புடன் 04.04.2024ம் தேதியில் திருப்பப்பட்டு, 05.04.2024ம் தேதியில் புகார்தாரர் வங்கியில் திருப்பப்பட்டதாகவும், பின்னர், புகார்தாரர் 08.04.2024ம் தேதியில் தனது வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை 12.04.2024ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டு, பின்னிட்டு, எதிரி பதிலோ, பணமோ, எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஆகவே, எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138ன் கீழ் தண்டித்து, புகார்தாரருக்குரிய இழப்பீடு வழங்க தீர்ப்பளிக்க வேண்டுமென புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கின் எதிரி புகார்தாரரிடம் 2021ம் ஆண்டு இருசக்கர வாகனத்தை தவணை முறையில் வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலை பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டது என்றும், இந்த வழக்கு காசோலையானது, Account Closed என்று திருப்பப்பட்டதாகவும், 2021 Vol 5 SCC 283ன் கீழ் வழங்கப்பட்ட முன் தீர்ப்பில் கூறியுள்ளவாறு நடைமுறை பின்பற்றவில்லை என்பதால் இந்த வழக்கு சட்டப்படி

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:00:40 +0530

நிலைக்கத்தக்கதல்ல என்றும், புகார்தாரருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும், எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் எனவும் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

10. **தீர்வு–**

புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள் இந்நீதிமன்றம் கூர்ந்து ஆராய்கையில்,

புகார்தாரரின் புகாரின் முதல் நிலை வழக்கு உள்ளதாக நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார். அவ்வாறு புகார்தாரர் முதல் நிலை வழக்கை நிரூபணம் செய்து புகார்தாரருக்கு ஆதரவாக வழக்கு உள்ள நிலையில் அனுமானம் எதிரிக்கு மாற்றப்படும். எதிரி அனுமானத்தை மறுத்து நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக தோற்றம் செய்யும் நிலையில் எதிரிக்கு ஆதரவாக அனுமானம் ஏற்பட்டு, திரும்ப புகார் வழக்கு நிருபணம் செய்ய வேண்டும் (Reverse onus). புகார் தனது வழக்கை எதிரிக்கு எதிரான குற்றப்பொறுப்பை நியாயமான ஐயத்திற்கு இடமில்லாமல் முழுமையாக நிரூபணம் செய்யப்பட வேண்டும். ஆனால், எதிரி புகார் வழக்கை முழுவதுமாக மறுத்து நிரூபணம் செய்ய தேவை இல்லை. எதிரி புகாரில் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக probable defence தோற்றத்தை ஏற்படுத்தி முதல்நிலை வழக்கை மறுத்தாலே போதுமானது ஆகும்.

11. இந்த வழக்கில் புகார்தாரரின், எதிரி, கடந்த 03.02.2024ம் தேதியில் கைமாற்று கடனாக ம.சா.ஆ.1ஆன ரூ.2,00,000/–க்கான காசோலையை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 (a)ன் கீழ் புகார்தாரர் வங்கியில் சலான் மூலம் தாக்கல் செய்தபோது, மேற்படி காசோலையானது, ம.சா.ஆ.2 04.04.2024ம் தேதியில் "Account Closed" என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட பின்னர், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138(b)ன் படி எதிரிக்கு சட்டத்திற்குட்பட்ட காலகெடுவிற்குள் காசோலைக்குரிய தொகையை செலுத்தக்கோரி எதிரிக்கு, கடந்த 08.04.2024ம் தேதியில் தனது வழக்கறிஞர் மூலம் ம.சா.ஆ.3 அறிவிப்பினை எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பை எதிரி 12.04.2024ம் தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4ஆக தாக்கல்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:00:43 +0530

செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பை புகார்தாரருக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138(c)–ன் படி 15 நாட்களுக்குள் காசோலை தொகைகளை எதிரி திருப்பித்தரவில்லை என்பதால், இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் பின்பற்றி புகார்தாரர் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளார். இதுபோன்ற வழக்குகளில் உச்சநீதிமன்றம் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் உள்ள நிபந்தனைகளை புகார்தாரர் பூர்த்தி செய்யும் பட்சத்தில் புகார்தாரருக்கு காசோலை கொடுத்த நபர் பொறுப்பாளியாவார் என சொல்லப்பட்டுள்ளது. அதில்

(2013) 1 SCC 117

MSR Leathers

/vs /

S. Palaniappan And Anr என்ற வழக்கில்

மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்புரையின்படி புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 (a), (b) & (c) ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் இந்நீதிமன்றத்தில் பூர்த்தி செய்துள்ளார். எனினும் எதிரி இந்த வழக்கில் எழும் முரண்பாட்டை நிரூபிக்கும் வகையில் மாற்று முறையான சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் சட்டப்படியான கடன் பொறுப்பை தீர்ப்பதற்காக இந்த வழக்கு காசோலை புகார்தாரருக்கு வழங்கவில்லை என எதிரி மறுத்தலிக்கவேண்டும். புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியத்தின்படி புகார்தாரர் இவ்வழக்கை மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி முதல்நிலை வழக்கு உள்ளதாக நிருபணம் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.

இந்த நீதிமன்றத்தால் கீழ்கண்ட வகையில் எதிரி அனுமானத்தை மறுத்தளிக்கலாம், மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில், **Rangappa (Vs) Sri Mohan, [AIR 2010 SC 1898]** for the principle that the initial presumption lies in favour of the complainant and it is the bounded duty of the accused to rebut such presumption.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில், **M/S Laxmi Dyechem (Vs) State of Gujarat & ors. [2012 SCC 13 375]** for the principle that if the accused is

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:00:49 +0530

able to establish a probable defence which creates doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can fail.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில், **Rohitbhai Jivanlal Patel v. State of Gujarat and Another [2019 SCC ONLINE SC 389]** for the principle that it is the bounded duty of the accused to bring the facts and circumstances to rebut the presumption and mere denial of the fact would not absolve the accused from his liability.

மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **M. Abbas Haji Vs T.N. Chennakesava (2019 SCC ONLINE SC 1240)** is relied upon for the proposition that it is the duty of the accused to explain and prove his part on how his cheque entered into the hands of the complainant

12. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கின் எதிரி புகார்தாரரிடம் 2021ம் ஆண்டு இருசக்கர வாகனத்தை தவணை முறையில் வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலை பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டது என வாதிட்டார்.

மேற்படி வாதத்தினை கருத்திற்கொண்டு புகார்தாரரின் புகார், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், புகார்தாரர் தன்னை ம.சா.1ஆக விசாரணை செய்து தனது சாட்சியத்தில், தான் தமிழன் ஆட்டோ ஏஜென்ஸி என்ற இரண்டு சக்கர வாகனங்கள் விற்பனை செய்யும் ஏஜென்ஸி அம்மாபேட்டையில் நடத்தி வருவதாகவும், எதிரி தாளவாடியில் உள்ள TASMAC கடையில் பணியாளராக வேலை செய்தும் மற்றும் Sree Pranav Oils செக் எண்ணெய் ஆட்டும் கடையினை மாரப்பனுரில் சொந்தமாக நடத்தி வந்தார் என்றும், தனது ஏஜென்ஸியில் இரண்டு சக்கர வாகனத்தை எதிரி விலைக்கு வாங்கிய வகையில் எதிரியை கடந்த 5 வருடங்களாக நன்கு தெரியும் என்கிற அடிப்படையில், கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் எதிரி ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) தேவைப்படுவதாக கூறியதன் அடிப்படையில், கடந்த 03.02.2024ம் தேதி அன்று தன்னிடம் இரண்டு மாதங்களில் திருப்பித் தருவதாக பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக எதிரி, ஆக்சிஸ் வங்கி, அந்தியூர் கிளையின் காசோலை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:00:51 +0530

எண்.040942 என்ற காசோலையை 03.04.2024 என பின் தேதியிட்டு தன்னிடம் கொடுத்துள்ளார் என்றும், பின்னர், மேற்கண்ட காசோலையை தான் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அம்மாபேட்டை கிளையில், 03.04.2024ம் தேதியில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது, Account Closed என்ற குறிப்புடன் 04.04.2024ம் தேதியில் திருப்பப்பட்டு, 05.04.2024ம் தேதியில் தனது வங்கியில் திருப்பப்பட்டதாகவும், பின்னர், தான் 08.04.2024ம் தேதியில் தனது வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை 12.04.2024ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டு, பின்னிட்டு, எதிரி பதிலோ, பணமோ, எதுவும் கொடுக்கவில்லை என்றும் என சாட்சியமளித்துள்ளார்.

13. மேற்படி சாட்சியத்தை எதிரி தரப்பில் மறுத்தளிக்கப்பட்டதா என பரிசிலனை செய்கையில், புகார்தாரர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

எதிரி என்னிடம் புது வாகனம் வாங்கினார் என்றால் சரியல்ல பழைய வாகனம் ஒன்றுதான் வாங்கினார். எதிரி வாங்கிய வண்டியின் பெயர் மற்றும் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால், ஜூபிடர் வாகனம் ஆனால், பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் வண்டி வாங்கிய அன்றைய தினம் வண்டிக்கான முழு தொகையும் செலுத்தி விட்டாரா என்றால் வேறொரு பைனான்ஸ் நிறுவனத்தில் பணம் வாங்கி எனக்கு கொடுத்தார். அந்த பைனான்ஸ் நிறுவனத்தின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தனலட்சுமி ஆட்டோ பைனான்ஸில் பணம் வாங்கி என்னிடம் கொடுத்தார். தனலட்சுமி பைனான்ஸ் எங்கு உள்ளது என்றால் பவானியில் பேருந்து நிலையம் அருகே உள்ளது என சாட்சியமளித்துள்ளார். எதிரிக்கு பைனான்ஸ் அனைத்தும் நான்தான் ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு பைனான்ஸில் பணம் ஏற்பாடு செய்த விவரம் தெரியுமா என்றால் எதிரிக்குத் தெரியும். இருசக்கர வாகனம் வாங்குபவர்களுக்கு பைனான்ஸ் வாங்கித் தருவேன் என்றால் சரிதான். நான் பைனான்ஸ் பணம் வாங்கி தரும்போது அதற்கு ஆதரவாக காசோலை போன்றவை வாங்கித் தருவேன் என்றால் சரியல்ல. ஆதார் கார்டு போன்றவை தான் வாங்குவேன் என சாட்சியமளித்துள்ளார்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:00:56 +0530

14. மேற்படி சாட்சியத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு தெரியவருவது, இந்த வழக்கின் எதிரி புகார்தாரரிடம் பழைய வாகனம் ஒன்று வாங்கி உள்ளார் என்பதும், தமிழன் ஆட்டோ ஏஜென்சீஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார் என்பதும், இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. பழைய வாகனம் வாங்கும் போது அதற்கான முழு தொகையும் அவர் செலுத்தவில்லை என்பதும் தனலட்சுமி என்கிற பைனான்சிலிருந்து பணம் வாங்கி இந்த வழக்கின் புகார்தாரருக்கு கொடுத்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், எதிரிக்கு தனலட்சுமி பைனான்சிலிருந்து இந்த வழக்கின் புகார்தாரர் தான் பணம் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார் என்பதும், அதற்கு ஆதரவாக ஆதார் கார்டு போன்றவை வாங்கி கொடுத்துள்ளார் என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

15. மேலும் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

எனக்கும் எதிரிக்கும் எந்த வரவு செலவு கிடையாது என்றால் சரிதான். எதிரி எனது வங்கிக் கணக்கிலோ அல்லது நேரடியாகவோ பணம் எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.

16. மேற்படி சாட்சியத்தில் இருந்து புகார்தாரருக்கும் எதிரிக்கும் எந்த வரவு செலவும் கிடையாது என்பதும், எதிரி ஒருபோதும் புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு நேரடியாகவும் அவரது வங்கி கணக்கிலும் பணம் செலுத்தியது இல்லை என புகார்தாரர் சாட்சியமளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

17. ஆனால், புகார்தாரர் மேற்படி குறுக்கு விசாரணை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக

எதிரி 2021ம் வருடம் வாகனம் வாங்கியதற்கு எனது வங்கி கணக்கிற்கு ரூ.4600/- பணம் செலுத்தினார் என்றால் சரிதான். நான் அந்த பணத்தை பைனான்ஸ்க்கு செலுத்தி விட்டேன் என சாட்சியமளித்துள்ளார்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:00:58 +0530

18. மேற்படி சாட்சியத்திலிருந்து, இந்த வழக்கின் புகார்தாரர் இந்த வழக்கின் எதிரி தனது வங்கிக் கணக்கிற்கு நேரடியாகவோ அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ எந்த பணமும் செலுத்தியது இல்லை என சாட்சியமளித்துவிட்டு அதற்கு மாற்றாக தனது குறுக்கு விசாரணையில், 2021ம் ஆண்டு வாகனம் வாங்கியதற்கு தனது வங்கி கணக்கிற்கு ரூ.4600/- செலுத்தியுள்ளார் என சாட்சியமளித்துள்ளார். மேலும், மேற்படி பணத்தை பைனான்ஸில் செலுத்தி விட்டதாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி பைனான்சில் எதற்கு நேரடியாக எதிரி பணத்தை செலுத்தாமல் புகார்தாரர் வங்கிக் கணக்கில் இருந்து பணம் செலுத்தப்படுகிறது என எந்த விளக்கமும் புகார்தாரர் தரப்பில் தெரிவிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் மேற்படி பைனான்ஸில் பணம் செலுத்தியதற்கு ஏதாவது ஒரு ரசீது வாங்கி இந்த வழக்கின் எதிரிக்கு கொடுக்கப்பட்டதா என்கிற எந்த விளக்கமும் எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

19. மேலும், இந்த வழக்கின் எதிரியிடமிருந்து பெறப்பட்ட ரூ.4,600/- பைனாஸ்க்கு செலுத்தப்பட்டது குறித்து இந்த வழக்கின் புகார்தாரர் தனலட்சுமி பைனாஸ்சில் தனது தரப்பு சாட்சியாக விசாரிக்கவில்லை என்பதும், விசாரிக்காததற்கான காரணமும் புகார்தாரர் தரப்பில் தெரிவிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், பைனாஸ்சிற்கு செலுத்தியதாக சொல்லப்படும் பணமானது எவ்வாறு செலுத்தப்பட்டது என்பது குறித்து எவ்வித விளக்கமும், எதிரிக்கு எவ்வளவு ரூபாய்க்கு பைனான்ஸ்சில் பணம் வாங்கி கொடுக்கப்பட்டது என்பது குறித்தும், எதிரி மேற்படி பணத்தை செலுத்தினாரா இல்லையா என்பது குறித்தும் எவ்வித விளக்கமும் புகார்தாரர் தரப்பில் தெரிவிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

20. மேலும், இந்த வழக்கில் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> ஒரு நபர் ஒருவருக்கு கடன் கொடுப்பதாக இருந்தால், அந்த கடனுக்கு ஆதரவாக காசோலை கடனுறுதி சீட்டு மற்றும் பத்திரங்கள் வாங்குவது வழக்கம் என்றாலும், மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:02:21 +0530

21. மேற்படி சாட்சியத்தில் இருந்து கடனுக்கு ஆதரவாக காசோலை கடனுறுதி சீட்டு மற்றும் பத்திரங்கள் வாங்குவது போன்ற விவரங்கள் தெரிந்தும் இந்த வழக்கின் புகார்தாரர் தனலட்சுமி பைனான்சுக்கு ஆதார் கார்டு மட்டும் வாங்கி கொடுத்ததாக கூறுவது நீதிமன்றம் ஏற்கும் வகையில் அமையவில்லை. மேலும், தனலட்சுமி பைனான்ஸில் எவ்வளவு ரூபாய்கு வட்டி கொடுக்கப்பட்டது எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்பது குறித்து எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் புகார்தாரர் தரப்பில் தெரிவிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எதிரி தரப்பில் வாதிடுவதுபோல் வழக்கு காசோலையானது, எதிரி இருசக்கர வாகனம் வாங்கும்போது, பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டதா என இந்நீதிமன்றம் சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.

22. மேலும், இந்த வழக்கின் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் பணத்தை எதிரிக்கு வட்டிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து தற்போது வரை எதிரியிடமிருந்து எவ்வித வட்டியும் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரி எனது உறவினர் என்றால் சரியல்ல எதிரி தனக்கு தெரிந்த நபர் ஆவார் என சாட்சியமளித்துள்ளார்.

23. மேற்படி சாட்சியத்திலிருந்து நீதிமன்றத்திற்கு தெரியவருவது இந்த வழக்கின் எதிரி புகார்தாரரிடம் வாகனம் வாங்கும்போது, புகார்தாரர் தான் பைனாஸ்சிலிருந்து பணம் வாங்கி கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால், இந்த வழக்கின் எதிரி புகார்தாரருக்கு உறவினர் இல்லை, தெரிந்த நபர் என்றே சாட்சியமளித்துள்ளார். மேற்படி தெரிந்த நபருக்கு வட்டி பேசாமல் கடன் கொடுத்ததாக சொல்வது இந்நீதிமன்றம் நம்பும் வகையில் அமையவில்லை.

மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில், எதிரி தரப்பு வாதத்தினை இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:02:57 +0530

24. ***கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கு காசோலையானது, Account Closed என்று திருப்பப்பட்டதாகவும், 2021 Vol 5 SCC 283ன் கீழ் வழங்கப்பட்ட முன் தீர்ப்பில் கூறியுள்ளவாறு நடைமுறை பின்பற்றவில்லை என்பதால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என வாதிட்டார்.***

மேற்படி வாதத்தினை கருத்திற்கொண்டு, பரிசீலனை செய்கையில், வழக்கு காசோலையானது, Account Closed என திருப்பப்பட்டாலும் அதன் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்கு நிலைக்கத்தக்கது என மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல முன்தீர்ப்புகளில் கூறியுள்ளது. மேலும், எதிரி தரப்பில் வாதுரையின்போது, எடுத்துரைத்த 2021 Vol 5 SCC 283ன் கீழ் வழங்கப்பட்ட முன் தீர்ப்பிற்கு இந்த வழக்கிற்கும் பொருந்தாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில், எதிரி தரப்பு வாதத்தினை இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

25. ***கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்று வாதிட்டார்.***

மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் ***Tedhi Singh Vs. Narayan Dass Mahant (2022 SCC ONLINE SC 302)*** என்கிற வழக்கில் for the preposition that unless the case is set up in the reply notice for the statutory notice, questioning the complainant did not have the wherewithal, the complainant cannot be expected to lead evidence on that aspect என்று கூறியுள்ளது. மேற்படி தீர்ப்பின் படி புகார்தாரருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என வாதம் எடுக்கப்பட்டது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:03:01 +0530

26. மேற்படி முன்தீர்புரையின்படி பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் எதிரி எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், புகார்தாரர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், தனக்கு இருசக்கர வாகனம் வாங்கும் விற்கும் தொழிளில் இருந்தும் தோட்டத்திலிருந்து வருமானம் வருகிறது என சாட்சியமளித்துள்ளார். எனவே, மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரி தரப்பு வாதத்தினை நிராகரிக்கப்படுகிறது.

27. மேலும், எதிரியிடம் குற்றச்சார்த்து வினவியபோது எதிரி பொய் வழக்கு. புகார்தாரரிடம் நான் வாங்கவில்லை எனது மனைவியும் மாமனாரும்தான் கடன் வாங்கினார்கள். பொய் வழக்கு என்றே கூறியுள்ளார் மற்றும் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் எதிரிக்கு பாதகமான (Incriminating circumstances)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்சாட்சி, நான் அவரிடம் எடுத்த வண்டிக்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், பொய்வழக்கு என்றும் கூறியுள்ளார்.

28. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் இரங்கப்பா எதிரி ஸ்ரீ மோகன் 2010 (4) CTC 118 என்கிற வழக்கில் வழங்கிய தீர்ப்பில் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் புகார்தாரருக்கு சாதகமாக உள்ள அனுமானத்தை மறுத்துரைப்பதற்கு எதிரியால் முன் வைக்கப்படும் வாதத்தை ஐயத்திற்கு இடமின்றி மெய்பிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், எதிரி குறிப்பிடுவது போல் அந்த செயல் நடைபெற்று இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்பதை முன்வைத்தால் போதுமானது என்று குறிப்பிட்டுள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரரின் புகாரை மறுத்தளிக்கப்பட்டு, வழக்கை நிரூபிக்கும் சுமையானது புகார்தாரருக்கு மாற்றப்படுகிறது. புகார்தாரர் தனது புகாரை எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:03:04 +0530

29. புகார்தாரர் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகளை யாதொரு சந்தேகத்திற்கிடமின்றி இந்நீதிமன்றத்தில் உரிய ஆவணங்கள் மற்றும் சாட்சியத்தின் மூலம் நிருபணம் செய்யப்படவில்லை. மேற்படி புகாரில் எதிரிக்கு எதிராக ம.சா.ஆ.1 சட்டப்படியான கடனை தீர்ப்பதற்கு கொடுக்கப்பட்ட காசோலைகள் அல்ல என்பதால் புகார்தாரரின் புகார் நிலைகத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்யப்படுகிறது. மேலும் புகார்தாரர் தனது வழக்கை சந்தேகத்திற்க்கு இடமின்றி நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

மேற்படி பரீசிலனைகளின் அடிப்படையில் எதிரிதரப்பு வாதத்தினை இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

30. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 3ல் நிரூபித்தல் (Proved) என்பதை ஒரு பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டது என்று எப்போது சொல்லப்படுகிறது என்றால், ஒரு நீதிமன்றம் தனக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா விஷயங்களையும் கவனத்தில்கொண்டபின் அந்தப் பொருண்மை இருப்பதாக நம்பி அல்லது அது இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்று கருதி ஒரு விவேகமுள்ள மனிதன் அந்த வழக்கின் சூழ்நிலையில், அந்த பொருண்மை இருப்பதாக யூகித்து செயல்படக்கூடிய நிலை இருந்தால் அந்த பொருண்மை மெய்ப்ப்பிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் என்று கூறுகிறது. மேற்படி சாதாரண விவேகமுள்ள மனிதனின் நிலையிலிருந்து இந்த வழக்கில் முன்னிடப்பட்டுள்ள விஷயங்கள் (matters) பரிசிலித்து புகார்தாரர் இந்த வழக்கினை சந்தேகத்திற்க்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

31. **முடிவாக,** எதிரி **மாற்றுமுறை ஆவணச் சட்டம் 138ன் கீழ் குற்றவாளி இல்லை** என முடிவு செய்து எதிரியை **கு.வி.மு.ச 255(1)ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை** செய்து உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 19:03:12 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜூலை மாதம் 15ம் நாளாகிய இன்று அவையறிய என்னால் பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:03:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
பவானி.

இணைப்பு:–

புகார்தாரர் தரப்பு சாட்சி–

ம.சா.1 திரு. ஜெயராமன் (புகார்தாரர்)

புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்–

ம.சா. ஆ.எண்.	தேதி	சான்றாவணம்	யாரால் குறியீடு செய்யப் பட்டது	குறிப்பு
ம.சா.ஆ.1	03.04.2024	ரூ.2,00,000/– ஆக்சிஸ் வங்கி, அந்தியூர் கிளையின் காசோலை எண்.040942 என்ற காசோலை	ம.சா.1	அசல்
ம.சா.ஆ.2	04.04.2024	ரிட்டர்ன் மெமோ.	ம.சா.1	அசல்
ம.சா.ஆ.3	08.04.2024	புகார்தாரரால் அவரது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு.	ம.சா.1	அலுவலக நகல்.
ம.சா.ஆ.4	12.04.2024	அஞ்சலக ஒப்புதல் அட்டை	ம.சா.1	அசல்
எ.த.சா.ஆ.1	07.02.2026	தமிழன் ஆட்டோ ஏஜென்சியின் Proforma Invoice	ம.சா.1	அசல்

எதிரி தரப்பு சாட்சி–இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பு சான்றுபொருட்கள் – இல்லை.

குறிப்பு–

1) தீர்ப்பு பற்றிய தகவல் வழக்கு தரப்பினர்களுக்கு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

2) சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 19:03:15 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
பவானி.